**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 27/2015**

**Deposition of Witness for : PW.13**

**Name** : டாக்டர் மனோஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12-03-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.3.2013ல் இரவு 9.33 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது திருவண்ணாமலை வேட்டவலத்தைச் சேர்ந்த சார்லஸ் என்பவரை அவரது உறவினர் வேளாங்கன்னி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை அன்றைய தினம் இரவு 10 மணியளவில் அவருடைய வீட்டில் அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்களால், செங்கலால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவு இல்லாமல் மயக்கமாக காணப்பட்டார். மேலும், அவரை பரிசோதனை செய்து கீழ்கண்ட காயங்களை பதிவு செய்தேன்.

1. இடது பக்க கண்ணின் கீழ் கிழிந்த காயம் 1க்கு 1 செ.மீ அதில் ரத்த கசிவுகளும், கன்னிய வீக்கத்துடன் காணப்பட்டது.

2. வாந்தி எடுத்ததாக கூறினார்.

3. வலது காதில் ரத்தக் கசிவு காணப்பட்டது. மேற்படி அவருக்கு உதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக அன்றைய தினமே வேறு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ. 16. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

நான் சிகிச்சை அளிக்கும்போதும், அவர் மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு அனுப்பும் வரை அந்த நபர் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவர் குடிபோதையில் இருந்துள்ளார் என்று நான் அ.சா.ஆ.16ல் சொல்லியுள்ளேன். வாந்தி எடுத்ததாக அவரை அழைத்து வந்த நபர் தான் கூறினார். அந்த நபரை மருத்துவமனையில் அனுமதித்தஉடன் போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆபத்தான நிலையில் இருந்ததால் அடிப்பட்டவரை பரிசோதனை செய்து உடனடியாக நான் மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன்.

ஒம்/- மனோஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.